வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 17.06.2026 புதன்கிழமை இதழ் : 162 பக்கங்கள் : 08

# சித்திரவதைகளுக்கு எதிராக அரசு பூச்சிய சகிப்புத்தன்மை

### ஐ.நாவிடம் உறுதிபடக் கூறினார் விஜித ஹேரத்



கொழும்பு, ஜூன். 17

சித்திரவதைகளுக்கு எதிராக அரசாங்கம் பூச்சிய சகிப்புத்தன்மை கொள்கையை தெளிவாகப் பின்பற்றுகிறது என வெளிவிவகாரம், வெளிநாட்டலுவல்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஐக்கிய நாடுகள் சித்திரவதை தடுப்பு உப குழுவின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் சித்திரவதை தடுப்பு துணைக் குழுவின் சிறப்பு நான்கு பேர் கொண்ட தூதுக்குழுவினர் நேற்று வெளிநாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பங்குப்பற்றினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் விஜித்த ஹேரத், குறிப்பாக சித்திரவதைகள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் "பூச்சிய சகிப்புத்தன்மை கொள்கையை" தெளிவாகப் பின்பற்றுகிறது. இக்கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக சட்டம், நிர்வாகம் மற்றும் நிறுவன ரீதியான பல நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றின் முன்னேற்றம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுவ தாகவும் தெரிவித்தார்.

இலங்கை 9 முக்கிய சர்வதேச மனித உரிமைகள்

07

## ஈஸ்டர் தாக்குதலின் பின்னால் சர்வதேசப் பின்னணி உள்ளது!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 17

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுக்குப் பின்னால் சஹ்ரானுக்கும் மேலாக இயங்கிய ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட சூத்திரதாரி மற்றும் சதித்திட்டக் குழுவொன்று உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசியல் விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல குழுக்கள் இணைந்து செயற்பட்டுள்ளன. இன்று ஊடகங்களுக்கு முன்னால் வந்து அரங்கேறும் நாடகங்களுக்கு அப்பால், இதற்குப் பின்னால் ஒரு வலுவான சர்வதேசப் பின்னணியும் சர்வதேசத் தொடர்புகளும் காணப்படுகின்றன.

அசாத் மௌலானா வழங்கிய வாக்குமூலங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இந்தத் தாக்குதலைப் பகுப்பாய்வு செய்ய முற்பட்டால், உண்மையான நீதி கிடைக்காது.

அதேபோல், நளிந்த ஜயதிஸ்ஸவிடம் இருந்து முறையான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால், இந்தச் சதித்திட்டத்தின் பல

07

## செம்மணி புதைகுழியிலிருந்து 6 எலும்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன். 17

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 26ஆம் நாளான நேற்று 6 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

அத்துடன் 6 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் 2 சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் அடங்குவதாகக் கூறப்படுகின்றது. மேலும், ஒரு எலும்புக்கூட்டின் இடுப்புப் பகுதியில் இருந்து இரண்டு நாணயங்கள் சான்று பொருள்களாக மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை மொத்தமாக 366 எலும்புக்கூடுகள்

07

## தான் கைது செய்யப்படுவதை தடுக்க கோரி கோட்டாபய மனு!



கொழும்பு, ஜூன். 17

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைக்கு அமைய, பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தான் கைது செய்யப்படுவதற்கு தடை விதிக்கக் கோரி, முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்

07

## சபாநாயகரின் சகோதரரும் அரசுக்கு எதிராக வீதியில்!

கொழும்பு, ஜூன். 17

நெல் கொள்வனவுப் பிரச்னையை முன்னிறுத்தி பொலனறுவையில் விவசாயிகள் முன்னெடுத்த வீதிப் போராட்டத்தில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் சகோதரரும் கலந்துகொண்டு அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார்.

இந்த போராட்டத்தின் போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "எங்களுக்கு நேர்ந்துள்ள இந்த அவல நிலை குறித்து அரசாங்கத்துடன் பலமுறை பேச்சுவார்த்தை மட்டத்துக்குச் சென்று நாங்கள்

07

## தமிழர் பகுதிகளில் மீட்கப்பட்ட ரூ. 161 இலட்சம் பெறுமதியான நகைகளின் அளவீடுகள் நிறைவு!

கொழும்பு, ஜூன். 17

வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற மனிதாபிமான நடவடிக்கையின்போது இலங்கை இராணுவத்தினரால் அந்தப் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட, 161 இலட்சம் ரூபாய் பெறுமதியான பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தங்க ஆபரணங்களின் அளவீட்டுப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் அறிவித்துள்ளது.

இந்தத் தங்க ஆபரணத் தொகுதி தற்போது இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

பத்தாயிரத்திற்கும் அதிகமான இந்தத் தங்க ஆபரணங்களை அளவீடு செய்து முடிப்பதற்குச்

07

## நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் அரசியல்வாதிகளை ஒடுக்க வேண்டாம்!

### சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு கண்டனம்

கொழும்பு, ஜூன். 17

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்து விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, திலித் ஜயவீர உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயல்வதாக சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் காவல்துறையினரைப் பயன்படுத்தி அரசியல்வாதிகளின் பேச்சுச் சுதந்திரத்தை முடக்க முற்படுவது கண்டிக்கத்தக்கது என அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் 8 ஆம்

07

## லஞ்சீற் பாவனை கட்டுப்பாடு; மிகச் சிறப்பான முன்னேற்றம்

### வடக்கு மாகாண ஆளுநர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன். 17

லஞ்சீற் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் எதிர்பார்த்ததை விட மிகச் சிறப்பான முன்னேற்றம் காணப்படுவதாகத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், எதிர்காலத்தில் பொலித்தீன் மற்றும் ஒரு நாள் பாவனைக்குரிய பிளாஸ்ரிக் கப்கள் ஆகியவற்றையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார். அத்துடன், லஞ்சீற்

07

## ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கும் கடன் தொகையை அதிகரிக்க அனுமதி

கொழும்பு, ஜூன். 17

கொள்கை அடிப்படையிலான கடன் வசதியின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும் கடன் தொகையை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு

07

## ஜனாதிபதி செயலகம் நோக்கி ஓட்டோச் சாரதிகள் ஊர்வலம்!

கொழும்பு, ஜூன். 17

வாராந்திர எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறும், ஓட்டோக்களுக்கான ஒற்றை-இரட்டை இலக்க முறையை நீக்குமாறும் கோரியும் ஓட்டோச் சாரதிகள் கொழும்பில் பேரணியொன்றை முன்னெடுத்ததுடன், ஜனாதிபதியிடம் விசேட மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

தங்களின் வாழ்வாதாரப் பிரச்னைகளை முன்வைத்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கி இந்த விழிப்புணர்வுப் பேரணியை அவர்கள் நடத்தினர்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**சுரேஷ் சாலே விவகாரம்**

# சி.ஐ.டி. அதிகாரிகளை விசாரிக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு!

கொழும்பு, ஜூன். 17

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்துள்ள முறைப்பாடு தொடர்பில் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்றைய தினமும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெறப்படும் என அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் உள்ள சுரேஷ் சாலே பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக அவருடைய உறவினர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அண்மையில் முறைப்பாடு ஒன்று அளிக்கப்பட்டிருந்தது.

அந்தப் முறைப்பாட்டின் அடிப்படையில், சுரேஷ் சாலே தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடம் குறித்து விசேட பரிசோதனை ஒன்று நடத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சாதாரண சிறைக்கூடம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்தச் சிறைக்கூடத்திற்குள் முறையான காற்றோட்டம் இல்லாதது உள்ளிட்ட பல பொதுவான அடிப்படைக் குறைபாடுகள் அவதானிக்கப்பட் டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுரேஷ் சாலே தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடத்துக்கு அருகில் இருந்த ஏனைய கைதிகளிடமும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடமிருந்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் மேலும் வாக்குமூலங்களைப் பெறவுள்ளதுடன், தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேயுக்கு வழங்கப்படும் மருத்துவ வசதிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கிறது.

# தென்னருவி வர்த்தகக் கண்காட்சி



யாழ்ப்பாணம், ஜூன். 17

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட தென்னருவி வர்த்தகக் கண்காட்சியும் தொழிற் சந்தையும் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கண்காட்சியை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

வட மாகாண கல்வித் திணைக்கள வர்த்தக பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. சுபாகரன் சிறப்பு விருந்தினராகவும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமான அ.கயிலாயபிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இரு நாள்கள் இக்கண்காட்சி நடைபெற்றது. (அ)

# தெற்காசிய எறிபந்து போட்டிக்கான இலங்கையின் தேசிய அணியில் கனகராஜன்குளம் மாணவர்கள்!



கொழும்பு, ஜூன். 17

இந்தியாவில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகளுக்கிடையிலான எறிபந்து போட்டியில் இலங்கை தேசிய அணிக்கு வவுனியா கனகராஜன்குளம் மகா வித்தியாலயத்தின் மாணவன் நா. நாவேந்தன் மற்றும் பாடசாலையின் பழைய மாணவரும் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவருமான எ. ஜெனிஸ்ரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எறிபந்து விளையாட்டில் திறமைகளை வெளிப்படுத்தி தேசிய மட்டத்துக்கு உயர்ந்துள்ள இவ்விரு வீரர்களும், வவுனியா மாவட்டத்திலிருந்து முதல் முறையாக இலங்கை தேசிய எறிபந்து அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் என்ற சிறப்பையும் பெற்றுள்ளனர்.

இவர்களின் வெற்றிப் பயணத்திற்கு வழிகாட்டி பயிற்றுவித்த வி.ஐங்கரதாஸ் மற்றும் சி. சத்தியாராஜ் ஆகியோருக்கு பாடசாலை சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளது. (அ)

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் 23 பிராந்திய காரியாலயங்கள் விரைவில்!

**பொதுமக்கள் முறைப்பாடு செய்ய வசதியாக**

கொழும்பு, ஜூன். 17

இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவின் 23 பிராந்தியக் காரியாலயங்களை நாடளாவிய ரீதியில் திறப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நடப்பு 2026 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்துக்குள் இந்தப் பிராந்தியக் காரியாலயங்கள் அனைத்தும் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை வழங்குவதற்கும் சாட்சியங்களை அளிப்பதற்கும் கொழும்புக்கு வரவேண்டிய கட்டாயம் தற்பொழுது காணப்படுவதாகவும், இந்தப் புதிய பிராந்தியக் கிளைகளின் ஊடாகப் பொதுமக்களின் அத்தகைய அசௌகரியங்கள் முற்றிலும் ஒழிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல் மற்றும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பணிகளை இந்தக் காரியாலயங்கள் முன்னெடுக்கவுள்ளன.

இதற்கென சட்ட அதிகாரிகள் குழுவொன்று உட்பட மொத்தம் 971 அதிகாரிகள் இந்தப் புதிய பிராந்தியக் கிளைகளுக்காக ஒதுக்கப்படவுள்ளதுடன், காரியாலயங்களை அமைப்பதற்கான பொருத்தமான கட்டடங்கள் மற்றும் இடங்களைத் தெரிவு செய்யும் பணிகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க மேலும் தெளிவுபடுத்தினார். (அ)

# ஹேமசிறி, பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிரான வழக்குகளின் தீர்ப்பு ஜூலை 31இல்!

கொழும்பு, ஜூன். 17

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்குத் தவறியமை மற்றும் குற்றவியல் அலட்சியம் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு முக்கிய வழக்குகளின் தீர்ப்புகளை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வழங்குவதற்கு கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் நேற்று முன் தினம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளமை குறித்து முன்கூட்டியே புலனாய்வு எச்சரிக்கைகள் கிடைத்திருந்தபோதிலும், அதனைத் தடுப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காது கடமையை வீணடித்ததாகக் கூறி சட்டமா அதிபரினால் இவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

நீதியரசர்களான பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலகரத்ன பண்டார ஆகியோர் அடங்கிய மூவகை நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி சமிந்த அத்துக்கோரள தனது வாய்மூல சமர்ப்பணங்களை நிறைவு செய்ததை அடுத்து, தீர்ப்புக்கான திகதியை நீதிமன்றம் அறிவித்தது.

இதேவேளை, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கின் விசாரணைகள் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவடைந்த நிலையில், அவரது வழக்கு மீதான தீர்ப்பும் இதே ஜூலை 31 ஆம் திகதி வழங்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# திறைசேரி நிரம்பி வழிகின்றது என்று அரசு கூறினாலும் மக்கள் யாசகம் பெறும் நிலை!

**அஜித் மான்னப்பெரும சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஜூன். 17



வங்கிகள் இலாபம் ஈட்டுவதாகவும், வெளிநாட்டு நாணய மாற்று கிடைப்பதாகவும் கூறி திறைசேரி நிரம்பி வழிகிறது என அரசாங்கம் கூறினாலும், மக்களுக்கு தற்போது யாசகம் எடுக்கும் நிலைமையே ஏற்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திறைசேரி நிரம்புகிறது என்றால் எதற்காக இன்னமும் கடன் வாங்க வேண்டும்? இப்போது கடன் வாங்கி திறைசேரி மகாவலி கங்கையைப் போல நிரம்பி வழிகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்படியென்றால் இந்தப் பணம் எல்லாம் எங்கே இருக்கிறது? மக்களுக்கு யாசகம் எடுக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டுள்ளது. இந்த பணம் பெலவத்தைக்கா போகிறது? அல்லது மற்றவர்களின் கணக்குகளுக்குப் போகிறதா? மக்களுக்கு இதனால் எந்தவொரு நன்மையும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது விமர்சனங்கள் இருந்தாலும், அவர் வீழ்ந்திருந்த நாட்டை ஒரு மட்டத்துக்கு கொண்டு வந்தார். எனினும், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக நாடு மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ வின் ஆட்சி காலத்தில் இருந்த பின்னோக்கிய நிலைக்கே தள்ளப்பட்டு வருகிறது-என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.06.2026 புதன்கிழமை
பராபவ வருடம், ஆனி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தலைகீழ் மாற்றம்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்யக்கூடாது என்ற பொலிசாருக்கு உத்தரவிடுமாறு கோரி முன்னாள் ஜனதிபதி கோட்டாபய ராஜபக்ச மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனுவை இலங்கையின் சட்ட வரலாற்றில் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். ஏனென்றால் இது ஒரு தலைகீழ் மாற்றத்தைக் குறித்து நிற்கிறது.

தான் முதலில் பாதுகாப்பு செயலாளராகவும் பிறகு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவும் பதவிகளில் இருந்த காலப்பகுதிகளில் அரசியல் எதிரிகளையும் மனித உரிமைகள் மற்றும் குடியியல் உரிமைகளுக்காக குரல் கொடுத்த சிவில் சமூக ஆர்வலர்களையும் குறிவைப்பதற்கு பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட ஒரு இராணுவ - அரசியல் தலைவர் இன்று அதே சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக நீதிமன்றத்தின் பாதுகாப்பை நாடியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கோட்டாபயவின் மனு அடிப்படையில் ஒரு “இடைக்கால நிவாரணத்தைக்” கோரி நிற்கிறது. அதாவது. அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரணைகள் குறித்த சட்டபூர்வமான விவாதங்கள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது

பொலிசாரோ அல்லது குற்றப்புலனாய்வு திணைக்களமோ (சி.ஐ.டி.) அவரைக் கைது செய்வதை தடுக்கும் நீதிமன்ற உத்தரவொன்றை மனு வேண்டிநிற்கிறது.

கோட்டாபயவுக்கு முன்னர் பலர் முன்வைத்த வாதங்களைப் போன்று அவரது சட்டத்தரணிகளும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் அரசியல் உள்நோக்கம் கொண்டது அல்லது நியாயமான சட்ட அடிப்படையற்றது என்று வாதிடலாம்.

ஒருவரைக் கைது செய்வதற்கான மிகவும் குறைந்த அளவுகோலைக் கொண்டிருப்பது பயங்கரவாத தடைச் சட்டத்தின் மிகவும் கொடிய ஏற்பாடுகளில் ஒன்றாகும். வெறுமனே சந்தேகத்தின் பேரில் பிடியாணை பிறப்பிக்காமலேயே ஒருவரை கைது செய்து தடுப்புக்காவலில் வைப்பதற்கு இந்த சட்டம் அனுமதிக்கிறது. தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்டு பிறகு நிரந்தரமானதாக மாறி 47 வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல நிரபராதிகள் தங்கள் வாழ்நாளின் பெரும்பகுதியை கழித்த துரதிர்ஷ்டவசமான அனுபவம் நிறைந்த வரலாற்றை இலங்கை கொண்டிருக்கிறது.


முன்னாள் ஜனாதிபதி ஒருவர் இத்தகையதொரு கைதைத் தடுப்பதற்காக முன்கூட்டியே நீதிமன்றத்தை நாடியிருப்பது பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் பரந்தளவிலான அதிகார வீச்சை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கோட்டாபயவின் மனு வேண்டிநிற்பதன் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவை வழங்கினால் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களில் இருந்து முன்னாள் ஜனாதிபதிக்கு எந்தளவு தூரம் விலக்களிப்பு அல்லது பாதுகாப்பு இருக்கிறது என்பது தெரியவரும். இது ஒரு புதிய சட்ட முன்மாதிரியாக உருவாக்கும். மனு நிராகரிக்கப்பட்டால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர் எவரும் இல்லை என்பதை அது உணர்த்தும்.

தான் ஒரு காலத்தில் கையாண்ட அதே பயங்கரவாத தடைச்சட்டத்தில் இருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கு கோட்டாபய இன்று நீதித்துறையை நம்பியிருப்பது தற்போதைய அரசியல் சூழலில் ஒரு பெரிய முரண்பாடாக நோக்கப்படுகிறது.

# சித்திரவதை சட்டவிரோதமானது,

## ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் அதுவொரு வழமை



ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியின் போது ஆயுதப் படைகளாலும் ஆயுதக் குழுக்களாலும் கைது செய்யப்பட்ட அல்லது கடத்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிரான கொடூரம் பற்றிய செய்திகளில் அடிக்கடி அடிபட்ட ஒரு இடமாகப் புகழ்பெற்ற “பத்தலந்த சித்திரவதை கூடம்” விளங்கியது. பத்தலந்த முகாமிற்கு கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை சட்டத்தரணி விஜேதாச லியனஆராச்சியின் உடற்கூற்று பரிசோதனையின் போது, அவரது உடலில் நூற்றுக்கணக்கான காயங்கள் இருப்பதும், கிட்டத்தட்ட அனைத்து விலா எலும்புகளும் உடைந்திருப்பதும் கண்டறியப்பட்டது.

**(நேற்றைய 3ஆம் பக்க தொடர்ச்சி)**

*1971ஆம் ஆண்டு சிறிமா பண்டாரநாயக்க அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி. மேற்கொண்ட முதலாவது கிளர்ச்சியின் போது பொலிஸாரின் விசாரணையின் போது தங்களது உறுப்பினரான கமலபந்து என்பவர் இயந்திர அரம் (machine saw) மூலம் துண்டு துண்டாக வெட்டப்பட்டதாக ஜனதா விமுக்தி பெரமுனவின் தலைவர்கள் கூறுகின்றனர். அப்போது ஆயிரக்கணக்கான சித்திரவதை செய்யப்பட்ட உடல்கள் பல ஆறுகளில் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது.*

*1979ஆம் ஆண்டில் தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கு ஆரம்ப நாட்களில் ஆயுதப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விசேட நடவடிக்கையின் போது இன்பம் என்ற இளைஞனும் கமலபந்துவை போன்றே அதே விதியை எதிர் கொண்டார்.*

**சித்திரவதையின் கொடூரமான வரலாறு**

*ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியின் போது ஆயுதப் படைகளாலும் ஆயுதக் குழுக்களாலும் கைது செய்யப்பட்ட அல்லது கடத்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிரான கொடூரம் பற்றிய செய்திகளில் அடிக்கடி அடிபட்ட ஒரு இடமாகப் புகழ்பெற்ற “பத்தலந்த சித்திரவதை கூடம்” விளங்கியது. பத்தலந்த முகாமிற்கு கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை சட்டத்தரணி விஜேதாச லியன ஆராச்சியின் உடற்கூற்று பரிசோதனையின் போது, அவரது உடலில் நூற்றுக்கணக்கான காயங்கள் இருப்பதும், கிட்டத்தட்ட அனைத்து விலா எலும்புகளும் உடைந்திருப்பதும் கண்டறியப்பட்டது.*

*அந்த நாட்களில் தெற்கில் உள்ள ஒரு ஆயுதப்படை முகாமில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு கொடூரமான சித்திரவதை முறைகள் பற்றி, அந்த முகாமில் கைதியாக இருந்து பின்னர் பிரான்சுக்கு குடியேறிய ரோஹித முனசிங்க எழுதிய புத்தகத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.*

*1988/89 காலப்பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட இத்தகைய கொடூரமான சம்பவங்கள், பின்னர் ஐக்கிய இராச்சியத்தில் புலம்பெயர்ந்து வாழும் சிரேஷ்ட ஜே.வி.பி ஆர்வலரான காமினி முத்துக்குமாரண எழுதிய “மதக கினி புபுரு” (நினைவுகளின் பொறிகள்) என்ற மற்றொரு புத்தகத்தில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.*

*ஜே.வி.பி. சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கு பிரத்தியேகமாக உள்ளாக்கப்படாவிட்டாலும், அரசாங்கத்திற்கு எதிரான இரு ஆயுதப் போராட்டங்களின் போதும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகளைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.*

*கைது செய்யப்பட்ட ஆயுதப்படை வீரர்களிடமிருந்தும், ஏனைய தமிழ் குழுக்களின் சந்தேகத்திற்குரிய உறுப்பினர்களிடமிருந்தும் தகவல்களைப் பெறுவதற்காக விடுதலை புலிகள் இயக்கம் பிரத்தியேகமான சித்திரவதை முறைகளைப் பயன்படுத்தியிருந்தது. பிரபாகரனின் ஐந்து அடுக்கு நிலத்தடி பதுங்கு குழி காணப்பட்ட புதுக்குடியிருப்பில், 18 அங்குல நீளமும் அகலமும், ஆறு அடி உயரமும் கொண்ட முட்கம்பி கூடுகளைப் படையினர் கண்டறிந்தனர்.*

*கைதிகளை அடைத்து வைத்து பல நாட்களுக்கு சுட்டெரிக்கும் வெயிலில் வைப்பதற்காக இந்த கூடுகள் பயன்படுத்தப் பட்டதாக அவர்கள் கூறினர், இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் ஒத்துழைக்க ஒப்புக் கொள்வதற்கு முன்பு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் அழிக்கப்படுவார்கள்.*

*மூன்றாம் உலகம் என்று அழைக்கப்படும் நாடுகளுக்கு மனித உரிமைகள் பற்றிப் போதிக்கும் நாடுகள் உட்பட அனைத்து நாடுகளிலும் இந்த மனிதாபிமானமற்ற செயல்கள் நடந்துள்ளன. சி.ஐ.ஏ. கட்டவிழ்த்து விட்ட சித்திரவதைகள் பற்றிய அறிக்கைகளின்படி, சி.ஐ.ஏ-வின் பல “கறுப்புத் தளங்களில்” (Black Sites) தடுத்து வைக்கப்பட்டிருந்த அபு சுபைதா என்ற ஒரு கைதி, “சுவர்களில் மோதப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, மணிக்கட்டுகளில் தொங்கவிடப்பட்டு, 83 முறை வாட்டர்போர்டிங் (முகத்தில் துணியைப் போர்த்தி தண்ணீர் ஊற்றி மூச்சுத் திணறடித்தல்) சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்.*

*ஒருமுறை அவர் சுயநினைவை இழக்கும் நிலைக்கும் சென்றார். 20 நாட்களுக்கும் மேலாக, அவர் ஒரு சவப்பெட்டியைப் போல வடிவமைக்கப்பட்ட “தனிமைப்படுத்தும் பெட்டியில்“ 11 நாட்களுக்கு மேல் கழித்தார். மேலும் ஒன்றரை நாட்களை அவரது கால்களையோ அல்லது முதுகையோ நிமிர்த்த முடியாதவாறு மிகச் சிறியதாக வடிவமைக்கப்பட்ட ஒரு பெட்டியில் கழிக்க வேண்டியிருந்தது.”*

*கசப்பான ஆனால் மறுக்க முடியாத ஒரு உண்மை என்னவென்றால், கொடூரமான குற்றவாளிகள் அல்லது பயங்கரவாதிகளை விசாரணை செய்வதில் சித்திரவதை என்பது ஒரு தவிர்க்க முடியாத கருவியாக உள்ளது. எந்தவொரு குற்றவாளியோ, பயங்கரவாதியோ அல்லது சிறிய குற்றவாளியோ கூட உடல் ரீதியான அல்லது உள ரீதியான அழுத்தம் கொடுக்கப்படாவிட்டால் விசாரணை அதிகாரிகளுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள்.*

*ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டும் போது, இந்த அழுத்தம் சித்திரவதையின் வடிவத்தை எடுக்கிறது. இது உண்மைதான், ஆனால், மனிதாபிமானமற்ற ஒரு முறையாகும்.*

**(எம்.எஸ்.எம். அயூப், டெயிலி மிறர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில்அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கடகம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச்செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.நிதானம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும் குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தொழிலில் லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பொறுமை தேவைப்படும்.

**தனுசு**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்லவரன் அமையும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

# கிளிநொச்சி மாவட்ட வீட்டுத்திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன். 17

கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத்திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று காலை தேசிய வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் ரீ.பீ. சரத் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், வீடற்றோரின் விவரங்கள், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட வீடுகளின் நிலை, இதுவரை வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் தேவையான வீடுகள் தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர், அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவேண்டும் எனவும், கிராம பிரஜாசக்தி தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு மற்றும் மேற்பார்வையுடன் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும், எவ்வித பக்கச்சார்பும் இன்றி பயனாளிகள் தெரிவு செய்யப்படவேண்டும் என்றும், வீடுகள் தரமானதும் பலமானதுமான முறையில் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தொடர்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட 35 வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

## ஐந்து மாதங்களுக்கு பின்னர் இடம்பெற்ற வடமராட்சி கிழக்கு அபிவிருத்திக் கூட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன். 17

வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

இவ் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜீவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 2ஆம் திகதி இடம்பெற்றதை தொடர்ந்து கடந்த ஐந்து மாதங்களுக்கு பின்னர் நேற்று நடைபெற்றது.

இவ் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## முல்லைத்தீவில் 55 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூன். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 2026ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் செயல்படுத்தப்படும் "தமக்கென ஓர் இடம் - அழகான வாழ்க்கை" தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இத்திட்டத்துக்காக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 55 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் 55 பயனாளிகளுக்கு தலா ஒரு மில்லியன் ரூபாய் செலவில் 55 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

திட்டத்தின் முதல் கட்டமாக, வற்றாப்பளை மற்றும் நீராவிப்பிட்டி பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை, தேசிய வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத் நேற்று முன் தினம் பயனாளிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் கூட்டுறவு பிரதி அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

கரைதுறைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், பிரஜா சக்தி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந் நிகழ்வில் பங்கேற்றனர். (அ)

## பொச்சு மட்டைகளுக்குள் மறைத்து மணல் கடத்திய சாரதி சிக்கினார்!

கிளிநொச்சி, ஜூன். 17

கிளிநொச்சியில் இருந்து தென்னம் பொச்சு மட்டைகளுக்குள் மறைத்து சட்டவிரோதமாக மணல் கடத்தி வந்த வாகனச் சாரதியை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

பளை பகுதியில் இருந்து தென்னம் பொச்சு மட்டைகளை ஏற்றிச் செல்வது போன்று, அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் மணலை ஏற்றி அதன் மேல் பொச்சு மட்டைகளை பரப்பி, யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பகுதிக்கு குறித்த நபர் நீண்ட காலமாக மணல் கடத்தி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் குறித்த வாகனம் வழிமறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டபோது, தென்னம் பொச்சு மட்டைகளுக்குக் கீழ் மறைத்து மணல் கடத்தப்பட்டு வந்தமை கண்டறியப்பட்டது. இதனை அடுத்து வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார்.

மணல் கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்ட சாரதியிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## மலையக மாணவர்களின் மேம்பாட்டுக்காக சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஸ்மார்ட்போர்ட்

யாழ்ப்பாணம், ஜூன். 17

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால், பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு ஸ்மார்ட் போர்ட் வழங்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் புகக்கடமுல்ல பகுதியில் அமைந்துள்ள பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் 650 மாணவர்களின் தொழில்நுட்ப மற்றும் இணையத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 52 அங்குல அகலமுடைய ஸ்மார்ட் போர்ட் வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி முதல்வர் ஜரீன் நிஷா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் கலந்து கொண்டு குறித்த உதவிப் பொருளை கல்லூரி நிர்வாகத்திடம் கையளித்தார்.

இந்த உதவி, மாணவர்களின் நவீன கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கற்றலை மேலும் வலுப்படுத்துவதுடன், மலையகப் பகுதி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பொருளாதார வீழ்ச்சி மீண்டும் ஏற்படாது!

## அமைச்சர் சுனில் குமார கமகே திட்டவட்டம்

கொழும்பு, ஜூன். 17

தற்போதைய சூழலில் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைய வாய்ப்பில்லை என்று இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள், ஊழல் மற்றும் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டமையே முக்கிய காரணங்களாகும். கடந்த ஒன்றரை வருடங்களாக பொருளாதாரம் வீழ்வதை நாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். ஆனால், இனி அவ்வாறு பொருளாதார வீழ்ச்சி ஏற்படாது. முந்தைய ஆட்சியில் நிலவிய ஊழல்களே வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர, தற்போதைய அரசாங்கம் பெற்றுள்ள கடன் தொடர்பில் எனக்கு துல்லியமாக நினைவில்லை. எனினும் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளே கடன் வாங்கும்போது, நாமும் கடன் வாங்குவதில் தவறில்லை. வாங்கும் கடனை எவ்வாறு முறையாக முதலீடு செய்கிறோம் மற்றும் திருப்பிச் செலுத்துகிறோம் என்ற திட்டமே முக்கியமானது. கடந்த அரசாங்கங்களைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்படுவது அரசியல் பழிவாங்கல் அல்ல. சட்டத்திற்கு அமைவாகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (அ)

# இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ள இருவரை 90 நாள் விசாரிக்க உத்தரவு!

கொழும்பு, ஜூன். 17

டுபாயில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் "புளுமெண்டல் சங்க" மற்றும் "மோதர நிபுண" வின் சகோதரர் ஆகியோர் 90 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

குற்றச் செயல்கள் மற்றும் தொடர்புகள் குறித்து விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும் உடல் பருமன்!

கொழும்பு, ஜூன். 17

நாட்டில் பாடசாலை மாணவர்களிடையே உடல் பருமன் அதிகரிக்கும் போக்குக் காணப்படுவதாக சுகாதார அமைச்சு கவலை வெளியிட்டுள்ளது.

13 முதல் 17 வயதிற்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் 17.4 வீதமானோர் கார்பனேற்றம் செய்யப்பட்ட குளிர்பானங்களை அதிகளவில் உட்கொள்வதே இதற்கு முதன்மைக் காரணம் என ஊட்டச்சத்து பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவர் மோனிகா விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த அபாயகரமான நிலைமையைத் தொடர்ந்து, பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து, பாடசாலைகளில் ஆரோக்கியமான உணவகங்களை நடத்துவதற்கான விசேட வழிகாட்டி நெறிமுறைகளை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# டெங்கு தாக்கம் அதிதீவிரம் சுகாதாரத்துறை எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 17

நாட்டில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்து 925 ஆக அதிகரித்துள்ளதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக உயர்வடைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சு கவலை வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 70 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தற்காலிக பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இவற்றுள் பியகம, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளும், கடுவெல, மகரகம, பிலியந்தலை மற்றும் மொரட்டுவ ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளும் அதிகளவிலான அபாய வலயங்களாகக் கண்டறியப்பட்டுள்ளதால் அங்கு வாழும் பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளனர்.

வேகமாகப் பரவி வரும் இந்த டெங்குப் பேரழிவை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் தங்களின் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் எனப் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# முன்னாள் சட்டமா அதிபரை உடனே விசாரிக்கவேண்டும்!

## விஜயதாஸ ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஜூன். 17

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் ஒரு "பெரிய சதித் திட்டம்" எனக் குறிப்பிட்டிருந்த முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என முன்னாள் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தனக்கான ஓராண்டுப் பதவிக் கால நீடிப்பைக் கோரி, அது மறுக்கப்பட்டதன் பின்னரே தப்புல டி லிவேரா இவ்வாறானதொரு சதித் திட்டக் குற்றச்சாட்டை முன்வைத்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடொன்றில் புகலிடம் கோரியுள்ள நபர் ஒருவர் முன்வைத்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், முன்னாள் சட்டமா அதிபரை விசாரிப்பதில் தற்போதைய சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க எவ்வித தாமதமும் காட்டக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதி கோரும் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், இந்தச் சதித் திட்டம் குறித்து தப்புல டி லிவேரா அறிந்திரும் உண்மைகளை வெளிக்கொண்டு வரச் சட்டமா அதிபருக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் கேட்டுள்ளார். (அ)

# விவசாயி மீது தாக்குதல்!

கொழும்பு, ஜூன். 17

கரந்தெனிய பகுதியில் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர், தன்னை பற்றி பொலிஸாருக்கு தகவல் அளித்த விவசாயி ஒருவரை கூர்மையான ஆயுதத்தால் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எகோடவெல பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த தாக்குதலில், அந்த நபரின் வாய்ப்பகுதி வெட்டப்பட்டு அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முன்னதாக போதைப்பொருள் வழக்கில் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை பெற்ற சந்தேக நபர், கோபத்தின் காரணமாக இந்த தாக்குதலை நடத்தியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் நிச்சயம் கண்டுபிடிக்கப்படவேண்டும்

## கிண்ணியா நகர சபைத் தவிசாளர் கோரிக்கை

அம்பாறை, ஜூன். 17

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு சட்ட ரீதியான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம். மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில்-

தற்கொலைதாரிகளின் திட்டமிட்ட தாக்குதல் காரணமாக எந்த அடிப்படைகளும் இன்றி பல நூறு கிறிஸ்தவ, கத்தோலிக்க மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதும் சம்பந்தமே இல்லாமல் முஸ்லிம் சமூகம் இனவாதிகளாக காட்டப்பட்டு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டதும் தாக்கப்பட்டதும் என்றுமே மறக்க முடியாத வேதனையான சம்பவமாகும்.

அரசியல் சுயநலங்களுக்காக வரலாற்றில் மறக்க முடியாத இப் பாதக செயல்களை அரங்கேற்றிய கொடூரர்களை கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்க வேண்டும் என்பதை கத்தோலிக்கர்களும் முஸ்லிம்களும் நாட்டின் நற்பிரஜைகளும் முன்மொழிந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் அரசாங்கம் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளையும் பாராட்டுவதோடு பூரண ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம்.

படிப்படியாக நீண்டு கொண்டிருக்கும் குற்றவாளிகளின் பட்டியல்களின் அடிப்படையில் பிரதான சூத்திரதாரியும் கண்டுபிடிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்படுகின்றபோது எதிர்காலத்தில் இவ்வாறான தொரு சம்பவத்தை மீண்டும் நிகழாதவாறு பாதுகாக்கும். இன நல்லுறவும் வளர்வதோடு நாடும் சுபிக்சமடையும்-என தெரிவித்துள்ளார். (அ)

# சம்மாந்துறையில் ஆரம்பமான டெங்குக் கட்டுப்பாட்டு வாரம்!



அம்பாறை, ஜூன். 17

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டிலும், சுகாதார அமைச்சின் வழிகாட்டலிலும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் "நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்" நேற்று முன்தினம் திங்கட்கிழமை சம்மாந்துறையில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர், பிரதேச செயலாளர் அல்ஹாஜ் மொஹமட் ஹனீபா, சுகாதார வைத்திய அதிகாரி திருமதி நிஸ்ரின் ஸியாத், பிரதேச சபைச் செயலாளர் யு.எல்.ஏ. மஜீத், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பைலான் நளீம் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறும் இந்நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் முதல் மூன்று நாள்களில் பொது இடங்கள், வீதியோரக் கான்கள், பஸ் தரிப்பிடங்கள் மற்றும் சந்தைப் பகுதிகள் ஆகியவற்றில் விசேட பரிசோதனை மற்றும் துப்பரவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# சாய்ந்தமருதில் மத தலங்கள், பொது சந்தைகள்; வர்த்தக நிலையங்களில் டெங்கு பரிசோதனை!



அம்பாறை, ஜூன். 17

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய, இவ்வாரம் விசேட டெங்கு ஒழிப்பு வாரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஜூன் 15 முதல் 20 வரை மதஸ்தலங்கள், பொதுச் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியன டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருதில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் பொதுச்சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்கள் மற்றும் பிரதேச செயலகத்தின் சுற்றுச்சூழல் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து டெங்கு பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் இனங்காணப்பட்டு உடனடியாக சுத்தம் செய்யப்பட்டதுடன், டெங்கு பரவலைத் தடுக்கும் நோக்கில் கடை உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு அறிவுரைகளும் வழங்கப்பட்டன. (அ)

# 75 அடி பள்ளத்தில் வீழ்ந்தது ஓட்டோ!

கொழும்பு, ஜூன். 17

நுவரெலியா மாவட்டம், ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை, கரோலினா பகுதியில் ஓட்டோ ஒன்று சுமார் 75 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஓட்டோ விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்றபோது, வெளிநாட்டிலிருந்து வருகை தந்த நபர் ஒருவரும் ஓட்டோவில் பயணித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த விபத்தினால் ஓட்டோவுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், காயமடைந்த சாரதி உடனடியாக வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவில் 20 இலட்சம் ரூபா பெறுமதியான 98 வீடுகள்

அம்பாறை, ஜூன். 17

நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊடாக அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 20 இலட்சம் பெறுமதியான 98 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ள நிலையில் முதற்கட்டமாக 25 பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் ஆலையடிவேம்புபிரதேச இணைப்பாளர் ரதீசன், பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பிரஜாசக்தி தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்து மீள்குடியேறி வீடுகள் இன்றி சிறிய கொட்டகைகளினுள் வாழ்ந்து வரும் அலிக்கம்பை மற்றும் கண்ணகி கிராமம் கிராமத்தில் இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளதுடன்

அங்கு இவ்வருடம் 98 வீடுகள் நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீடும் அரசினால் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# காத்தான்குடி பிரதேச செயலகத்தை நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை

## இரண்டு புதிய செயலிகள் அறிமுகம்

மட்டக்களப்பு, ஜூன். 17

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வியாபார நிறுவனங்களை ஒன்லைனில் பதிவு செய்து பதிவுச் சான்றிதழை இலகுவாக பெற்றுக் கொள்ளும் வகையில் ஒரு செயலியும் பொது மக்கள் பிரதேச செயலாளர் உதவி பிரதேச செயலாளர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்வதற்கான செயலியும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த செயலிகளின் அறிமுகத்தை அபிவிருத்தி உத்தியோகத்தர் ரசூல் ஷா மேற்கொண்டதுடன் இதன் செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கினார். காத்தான்குடி பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜூத் அவர்களின் ஆலோசனையுடனும் வழிகாட்டலிலும் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள இந்த செயலிகள் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு உதவி பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் ஜரூப், சமுர்த்தி தலைமைப் முகாமையாளர் திருமதி பாத்தும்மா பரீட் உட்பட நிகழ்வில் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு கொழும்பில்!

கொழும்பு, ஜூன். 17

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு பெருவிழா நேற்று முன் தினம் கொழும்பு சினமன் விருந்தகத்தின் பிரதான அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

"கல்வி கண் திறப்போம் - கற்போருக்கு கரம் கொடுப் போம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இவ்விழா, மன்றத்தின் தலைவர் ஏ.எஸ். ஞானத்தின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், கொழும்பு மாநகர சபை மேயர் விராய் கெலி பல்தசார் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் மன்றத்தின் ஸ்தாபக தலைவர் பிச்சை தவக்குமார்,

பணிப்பாளர் எம். தேவதாசன், ஆலோசகர் எம். செந்தில்நாதன், தொழிற்துறையினர், கலைஞர்கள், மன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



மன்றத்தின் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக நினைவு முத்திரை வெளியீடும், இரு தசாப்தங்களை ஒட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் வெளியீடும் நடைபெற்றது. அதனுடன், மன்றத்தின் 20ஆம் ஆண்டு நிறைவையொட்டி எழுச்சி கீதமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் மேற்கொண்டு வரும் கல்வி மற்றும் சமூக சேவைகளைப் பாராட்டி சிறப்புரைகள் இடம்பெற்றதுடன், முக்கிய விருந்தினர்களுக்கு நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சித்திரவதைகளுக்கு...

உடன்படிக்கைகளிலும் கையெழுத்திட்டுள்ள ஒரு நாடு என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த விஜயத்தின் மூலம் தானாக முன்வந்து ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளுக்கு இணங்குவதை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு தெளிவாக பிரதிபலிக்கிறது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும்,சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும்,நல்லாட்சியை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் தளராத அர்ப்பணிப்பை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தினார். இலங்கை அரசாங்கம் இந்த துணைக் குழுவுடன் திறந்த,முற்போக்கான மற்றும் வெளிப்படையான முறையில் செயற்படும் என்றும், அரசியலமைப்பிற்கு இணங்க இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை 2017 டிசெம்பர் மாதத்தில் சித்திரவதைகளுக்கு எதிரான மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது அவமதிப்பான நடத்துகை அல்லது தண்டனைகளுக்கு எதிரான உடன்படிக்கையின் விருப்பத்திற்குரிய நெறிமுறையில் கையெழுத்திட்டதன் பின்னர், ஐக்கிய நாடுகளின் சித்திரவதை தடுப்பு உப குழு இதற்கு முன்னர் 2019 ஏப்ரல் மாதத்தில் தனது முதலாவது விஜயத்தை இலங்கைக்கு மேற்கொண்டிருந்தது.

அதன் இரண்டாவது விஜயமாக ஆயிஷா ஜூன் முஹம்மது (மாலைதீவு) தலைமையின் கீழ் வருகை தந்துள்ள இந்த தூதுக்குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மற்றும் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன்,சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி உயர்மட்ட அரச அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர். (அ)

## ஈஸ்டர் தாக்குதலின்...

மறைக்கப்பட்ட உண்மைகள் விரிவாக வெளிவந்திருக்கும். சாரா ஜாஸ்மினை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு இந்த அரசாங்கம் இந்தியாவிடம் இதுவரை கோரிக்கை விடுத்துள்ளதா?

தற்காலிக அரசியல் மகிழ்ச்சிக்காகவோ அல்லது தேர்தல் லாபங்களை அடைவதற்காகவோ "நாங்கள் விசாரணைகளை நடத்துகிறோம்" என்று கூறி, அதன் முறையியலை சட்டவிரோதமாக்கக் கூடாது. அவ்வாறு செய்தால், இறுதியில் உண்மையான குற்றவாளிகளும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய முக்கிய புள்ளிகளும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கே அது வழிவகுக்கும். இது நீதியை நிலைநாட்டும் வழி அல்ல.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அந்தப் பதவியில் நீடிக்கும் வரை இந்த விசாரணைகள் நியாயமான முறையில் நடக்காது என்று கத்தோலிக்க திருச்சபை ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறது. ஆனால், இன்றும் கூட அவர் அதே பதவியில் தான் நீடிக்கிறார். அத்துடன், இப்ராஹிம் என்பவருடன் தொடர்புடைய விவகாரத்தில் தற்போதைய அரசாங்கம் மிகவும் மென்மையான கொள்கையையே பின்பற்றி வருகிறது.

இப்போது நமக்கு விசாரணை அதிகாரி ஷானி பற்றியும் தெரியும், ரவி பற்றியும் தெரியும், அதனால் சுரேஷ் சாலே பற்றியும் நன்றாகவே தெரியும்.

ஷானி அபேசேகர ஓய்வு பெற்ற பிறகு, ஒரு அரசியல் கட்சியின் முழுநேர உறுப்பினராக இணைந்து தீவிரப் பிரசாரங்களில் ஈடுபட்டார். அவ்வாறு அரசியல் பிரசாரங்களில் ஈடுபட்ட ஒருவருக்கு, அவரது சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக மாறிய பின், மீண்டும் ஒருமுறை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் போன்ற மிகவும் பொறுப்புவாய்ந்த, பாரதூரமான மற்றும் சுயாதீனமாக இருக்க வேண்டிய ஒரு பதவியை வழங்க முடியாது-என்றார். (அ)

## சபாநாயகரின்...

பேசியுள்ளோம்.

நாங்கள் விடுத்த கோரிக்கை என்னவென்றால், இந்த பொலன்னறுவையில் இருப்பவர்கள் உங்களுக்கு வாக்களித்த மக்கள், இந்த அரசாங்கத்தை உருவாக்குவதற்காக வாக்களித்த மக்கள் ஆவர்.

எனவே, இந்த விவசாய மக்களின் கோரிக்கை முற்றிலும் நியாயமானது. அதனால், தயவுசெய்து அரசாங்கம் தலையிட்டு, கூடிய விரைவில் நெல் களஞ்சியசாலைகளைத் திறந்து, ஒரு கிலோ நெல்லை 141 ரூபாய் என்ற மட்டத்தில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நெல் களஞ்சியசாலைகளைத் திறந்து நெல்லைக் கொள்வனவு செய்யாவிட்டால், இந்த ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்ய மாட்டார்கள்.

எனவே, கூடிய விரைவில் நெல் களஞ்சியசாலைகளைத் திறந்து, இந்த பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள நெல்லைக் கொள்வனவு செய்து, விவசாய மக்களின் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண அரசாங்கம் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்காகவே இன்று இந்த விவசாய மக்களுடன் நாங்களும் வீதியில் இறங்கியுள்ளோம்.-என்றார். (அ)

## தான் கைது...

மனு தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தன ஊடாகவே இந்த மனுவை கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர, அதன் நிலையப் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக, கைது செய்யப்படுவதற்கு தடை விதிக்கக் கோரி பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர், மேன்முறையீட்டு நீதிமன்றில் ஏற்கனவே மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவே மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## செம்மணி புதைகுழி...

அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 357 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

## தமிழர் பகுதிகளில்...

சுமார் ஒரு வருட காலம் எடுத்ததாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, குறித்த தங்க ஆபரணங்கள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதவான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இதன்போது உத்தரவிட்டார்.

விடுதலைப்புலிகள் முகாம்கள், சட்டவிரோத வங்கிகள் உள்ளிட்ட கட்டடங்களிலிருந்து மீட்கப்பட்டு, தற்போது இராணுவப் புலனாய்வுப் பணிப்பகத்தின் பொறுப்பில் உள்ள இந்தத் தங்க ஆபரணங்களை, தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையிடம் ஒப்படைத்துப் பரிசோதித்து, அது தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் முந்தைய வழக்குத் தவணையின்போது உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நீதிமன்ற அவமதிப்பு...

இலக்க நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் கீழ், பொலிஸார் நேரடியாக இவ்வாறான வழக்குகளைத் தொடர சட்டத்தில் இடமில்லை எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயற்பட்ட காவல்துறை அதிகாரி ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் சி.ஐ.டி. பணிப்பாளராகவும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராகவும் நியமித்து, அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை மௌனமாக்க நாடகம் ஆடப்படுவதாக அந்த அமைப்பு சாடியுள்ளது.

அரசியலமைப்பின் 14(1)(ஏ) பிரிவின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களின் அடிப்படை பேச்சுச் சுதந்திரத்தை அரசியல்மயப்பட்ட காவல்துறை நடவடிக்கைகள் மூலம் முடக்க முடியாது எனவும், இந்த முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

## ஜனாதிபதி...

வெளியிட்ட பேரணி ஏற்பாட்டாளர்கள்-

"தற்போது வாரத்திற்கு வெறும் 20 லீற்றர் எரிபொருளே ஓட்டோக்களுக்கு வழங்கப்படுகிறது, அதாவது ஒரு நாளைக்குச் சராசரியாக 2.8 லீற்றர் மட்டுமே கிடைக்கிறது.

இந்த மிகக் குறைந்த அளவு எரிபொருளை வைத்துக் கொண்டு எங்களால் தொழில் செய்ய முடியாது. ஓட்டோக்களை வீதிகளில் தள்ளிக்கொண்டு செல்லும் நிலையே இனி ஏற்படும்.

எங்கள் தொழிலைப் பாதுகாக்குமாறும், வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துமாறும் கோரி ஜனாதிபதியிடம் இந்த மனுவை சமர்ப்பித்துள்ளோம் -என்றனர். (அ)

## ஆசிய அபிவிருத்தி...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கை அடிப்படையிலான கடன் மூலம் 2026 ஆம் ஆண்டில் 380 அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2026.03.16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வர்த்தக, முதலீட்டு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் - உப வேலைத்திட்டம் 1 இற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும், சமகால மத்தியகிழக்கு நெருக்கடி மற்றும் காலநிலை அதிர்ச்சியால் மேலெழுந்துள்ள பொருளாதார உறுதிப்பாடற்ற நிலைமையில் குறித்த உப வேலைத்திட்டத்தின் கீழான கடன் தொகை, 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியிடல் பக்கேஜ் மூலம் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்து ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

## லஞ்சிற் பாவனை...

பாவனையைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மிகவும் சிறப்பாகச் செயலாற்றி வருவதாகவும் அவர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நிதி, திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, மின்சக்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லஞ்சீற் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டது. யாழ்ப்பாண நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் தரமற்ற சொப்பிங் பைகள், ஒரு நாள் பாவனைக்குரிய பிளாஸ்டிக் கப்கள் மற்றும் லஞ்சீற் என்பன இரகசியமாக விற்பனை செய்யப்படுவதாகச் சுகாதார மருத்துவ அதிகாரிகளால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களின் உரிமங்களை ரத்துச் செய்ய உள்ளூராட்சி மன்றங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ள புதிய சுற்றாடல் சட்டவரைவு நடைமுறைக்கு வந்ததும், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் மேலும் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எல்.சி.ஆனந்த் தெரிவித்தார்.

குறிப்பாக, நல்லூர் பெருந்திருவிழா உள்ளிட்ட ஆலய உற்சவக் காலங்களில் பொலித்தீன் மற்றும் ஒரு நாள் பிளாஸ்டிக் கப்களின் பாவனையை முற்றாகக் கட்டுப்படுத்தவேண்டும் எனவும், யாழ். மாநகர சபை கடைகளுக்கான அனுமதியை வழங்கும்போது இதனை ஒரு கட்டாய நிபந்தனையாக விதிக்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

குளங்கள் மற்றும் சுற்றுவட்ட வீதிகளை அழகுபடுத்துவதற்குப் பெருநிறுவனங்களின் கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு நிதியைப் பெற்றுக்கொள்வது அல்லது வர்த்தக சங்கங்களின் உதவிகளை நாடுவது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆளுநரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி அமைச்சின் வீட்டுத்திட்டங்கள் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். அத்துடன், அமைச்சின் திடீர் கண்காணிப்புக் குழுவால் (பறக்கும் படை) கண்டறியப்பட்ட குறைபாடுகளும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

உள்ளூராட்சித் திணைக்களத்துக்குப் புதிய பொறியியலாளர்கள் இணைக்கப்பட்டதன் பின்னர் அபிவிருத்தி வேலைகள் விரைவாகவும் சீராகவும் நடைபெறுவதாக உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

மாகாணப் பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு அறிவிக்காமல், சில திட்டங்கள் நேரடியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுவது குறித்து உதவி ஆணையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறான முறையற்ற ஒதுக்கீடுகளைத் தவிர்க்கும் வகையில், சம்மந்தப்பட்ட திட்டப் பணிப்பாளர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு பிரதம செயலாளரை ஆளுநர் பணித்தார்.

வவுனியா - செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் மேற்கொண்ட களப் பயணத்தை நினைவுகூர்ந்த ஆளுநர், அங்குள்ள சில கிராமங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்ததாகக் கவலை வெளியிட்டார். அக்கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக நிறைவேற்றுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அவர் பணிப்புரை விடுத்தார்.

ஊர்காவற்றுறை - கண்ணகை அம்மன் இறங்குதுறை வீதியின் புனரமைப்புப் பணிகள் இந்த ஆண்டுக்குள் நிறைவடையும் எனவும், இறங்குதுறையின் புனரமைப்புப் பணிகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் எனவும் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த விசேட மீளாய்வுக் கூட்டத்தில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள் (நிர்வாகம், திட்டமிடல், நிதி, பொறியியல்), உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாநகர சபைகளின் ஆணையாளர்கள், காணி ஆணையாளர், நகர சபைகளின் செயலாளர்கள், வீதி அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் பணிப்பாளர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளர், வீதி அபிவிருத்தித் திணைக்கள மாவட்டப் பொறியியலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு


# நெல்லுக்கு நியாயமான விலை கோரி கிளிநொச்சி விவசாயிகள் போராட்டம்!

**அரச அதிரிடம் மகஜர் சமர்ப்பிப்பு**

கிளிநொச்சி, ஜூன். 17

நெல்லுக்கான நியாயமான விலையினை பெற்றுத்தரக் கோரி, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கமக்கார அமைப்புக்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி விவசாயிகளால் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கிளிநொச்சி ஏ-9 வீதியின் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது. பேரணியின் முடிவில் ஜனாதிபதி மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், விவசாய அமைச்சர் உள்ளிட்டோருக்கான மகஜர் ஒன்று மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனிடம் கையளிக்கப்பட்டது.




அரசாங்கம் தற்போது ஒரு கிலோ நெல்லை 120 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதாகவும், இது உற்பத்தி செலவுக்கு போதுமானதாக இல்லை எனவும் தெரிவித்த விவசாயிகள், 135 ரூபாவுக்கு அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்யவேண்டும் என வலியுத்தியிருந்தனர். (அ)

## நாட்டின் ஒட்டுமொத்தக் கடன் சுமை 35 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரிப்பு!

**அரசை கடுமையாக சாடுகிறார் தயாசிறி**

கொழும்பு, ஜூன். 17

கடந்த 16 மாத காலப்பகுதிக்குள் நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமை 28 ட்ரில்லியன் ரூபாவிலிருந்து 35 ட்ரில்லியன் ரூபா வரை, மேலும் 7 ட்ரில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 76 வருட காலப்பகுதியில் நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமையே 28 ட்ரில்லியன் ரூபாவாகத்தான் காணப்பட்டது. ஆனால், தற்போதைய குறுகிய காலப்பகுதிக்குள் அது மேலும் 7 ட்ரில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இது குறித்து நான் பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்பியிருந்தேன்.

கடன் வாங்கி அரசாங்கம் நடத்தத் தேவையில்லை என்று கூறியவர்கள், இன்று எங்களை விடவும் அதிகமாகக் கடன் பெற்று வருகின்றனர்.

அரசாங்கத் தரப்பினர் அன்று 1 ட்ரில்லியன் என்று குறிப்பிட்டு வந்த தொகையானது தற்போது 500 மில்லியனாகக் குறைவடைந்துள்ளது.

நாட்டின் உண்மையான பொருளாதார நிலைமை என்ன என்பதை மக்கள் எதிர்காலத்தில் புரிந்து கொள்வார்கள். என்ன நடக்கப் போகிறது என்பதை நாட்டின் மக்களே உணர்ந்து கொள்ளும் காலம் தூரத்தில் இல்லை-என்றார். (அ)

## உயிர்மாய்ப்பு தொடர்பான செய்திகள் காணொளிகள் பகிர்வதை தவிருங்கள்!

**பொதுமக்களிடமும் ஊடகங்களிடமும் வேண்டுகோள்**

கொழும்பு, ஜூன். 17

சமூக வலைத்தளங்களில் உயிர்மாய்ப்பு தொடர்பான காணொளிகள் மற்றும் பதிவுகளைப் பகிர்வதிலிருந்து பொது மக்களும் ஊடகங்களும் விலகியிருக்குமாறு சுகாதாரத் துறை நிபுணர் கலாநிதி சதுரியா கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான பதிவுகள் சமூகத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

கொவிட் 19 பெருந்தொற்று காலத்தில், பொதுமக்கள் மத்தியில் நேர்மறையான நடத்தைகள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் மிக முக்கிய பங்காற்றியதை அவர் இதன்போது நினைவு கூர்ந்தார்.

"கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஊடகங்கள் நல்ல பழக்கவழக்கங்களை சமூகத்தில் உருவாக்க உதவின. உயிர் மாய்ப்பு போன்ற உணர்வுபூர்வமான விவகாரங்களிலும் ஊடகங்களின் அதேபோன்ற பங்களிப்பு தொடர வேண்டும்," என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உயிர்மாய்ப்பு தொடர்பான செய்திகளை அறிக்கை செய்யும்போது ஊடகங்கள் தீவிர எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும் என்று சிரேஷ்ட ஊடகவியலாளர் சந்தன சூரியபண்டார வலியுறுத்தியுள்ளார்.

விழிப்புணர்வு பிரசாரங்களில் ஈடுபடும் சில வல்லுநர்கள், சில நேரங்களில் தங்களை அறியாமலேயே வரம்புகளை மீறிச் செயல்படக்கூடும் என்றும், அது தேவையற்ற விபரீத விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் எச்சரித்தார். (அ)

## டித்வா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட புனித தலங்களை புனரமைக்க அனுமதி

**90 இடங்களுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு**

கொழும்பு, ஜூன். 17

டித்வா அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள புனித தலங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான விசேட வேலைத்திட்டத்தின் கீழ், மேலதிகமாக 90 புனித தலங்களை புனரமைப்பதற்கான நிதியொதுக்கீட்டு யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

டித்வா அனர்த்தத்தினால், மொத்தமாக 758 விகாரைகளும், 272 இந்துக் கோயில்களும், 199 முஸ்லிம் பள்ளிவாசல்களும், 99 கிறிஸ்தவ ஆலயங்களும் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளமை பதிவாகியுள்ளது.

கடந்த 2026.04.27 அன்று எட்டப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக, புத்தசாசன நிதியம், மத்திய கலாசார நிதியம் மற்றும் அநகாரிக தர்மபால மன்றம் ஆகியவற்றின் மூலமாக 800 மில்லியன் ரூபா நிதி திரட்டப்பட்டது. இந்த நிதியைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட புனித தலங்களில் 178 இடங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எஞ்சியுள்ள புனித தலங்களில் மேலும் 90 இடங்களைப் புனரமைப்பதற்காக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 01ஃ2026 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, 129.69 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த 90 வணக்கத்தலங்களின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே தற்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## அரசின் அலட்சியத்தால் டெங்கு தொற்று தீவிரம்!

**நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு**

கொழும்பு, ஜூன். 17



நாட்டில் வேகமாகப் பரவி வரும் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் முறையான எந்தவொரு திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

அநுராதபுரம், பொலனறுவை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கான புதிய கட்சி அமைப்பாளர்களை நியமிக்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் டெங்கு தாக்கம் அதிகரித்து மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. நோயாளர்களை வீடுகளுக்கு திருப்பி அனுப்பும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பான்மையான பிரதேச சபைகள் தற்போது தேசிய மக்கள் சக்தியின் வசமே உள்ளன. ஆனால், அவர்கள் துப்புரவுப் பணிகளைச் சரியாகச் செய்வதில்லை.

கொழும்புக்கு அருகிலுள்ள ஒரு பிரதேச சபையில் டெங்கு நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டு புகை விசிறக் கோரியபோது, "ஒரு நோயாளி இருந்தால் போதாது, புகை விசிற வேண்டுமாயின் குறைந்தது 10 நோயாளர்களாவது இருக்க வேண்டும்" எனக் கூறியுள்ளனர். இவர்களின் மன நிலை இவ்வளவுதான்.

அதேவேளை, அரசாங்கத்தின் கணக்கில் ஒரு டிரில்லியன் ரூபா உள்ள போதிலும், மக்கள் மீது சுமையேற்றப்படுகிறது. இதனால் ஆரோக்கியமான நாடு உருவாவதை விட, ஏழைகளின் நாடே உருவாகும். அரசாங்கத்தில் உள்ளவர்கள் செல்வந்தர்களாவதை நாம் இப்போது காண்கிறோம்-என்றார். (அ)

## காலி வைத்தியசாலை புற்றுநோய் பிரிவில் தீ!

கொழும்பு, ஜூன். 17

காலி தேசிய மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த மின்மாற்றி ஒன்றில் நேற்று நண்பகல் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

மின்மாற்றியில் தீ பரவத் தொடங்கியதைத் தொடர்ந்து, பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புற்றுநோய் பிரிவுக்கான மின்சார விநியோகத்தை முழுமையாக துண்டிப்பதற்கு மருத்துவமனை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும், தீ விபத்தின்போது உடனடியாக செயற்பட்ட மருத்துவமனை ஊழியர்களும் காலி மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (அ)

## 126 பாடசாலை விடுதிக் கட்டடங்களை நவீனமயமாக்க 1,008 மில்லியன் ரூபா!

கொழும்பு, ஜூன். 17

இலங்கையில் உள்ள பாடசாலை விடுதிகளில் பழுதடைந்த நிலையில் காணப்படும் 126 விடுதிக் கட்டடங்களை நவீனமயமாக்குவதற்கான விசேட கருத்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எமது நாட்டுப் பாடசாலை விடுதிகளில் நிலவும் குறைபாடுகள் காரணமாக, அங்கு தங்கியுள்ள மாணவர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் கல்விச் செயலாற்றுகைகளுக்கு எதிர்மறை விளைவுகள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இந்த விடுதிகளுக்குத் தேவையான வசதிகளை அவசரமாக நவீனமயப்படுத்தி, மாணவர்களின் கல்வி மற்றும் சுகாதாரத்திற்குப் பொருத்தமான ஒரு தரப்பண்பான சூழலை உருவாக்க வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 1,008 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்திட்டமானது 2026-2028 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் அமுல்படுத்தி முடிக்கப்படவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media